18th September 1961]

Hospitals

* 1576 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மத அடிப்படையில் நடத்தப்பட்டுவரும் ஆஸ்பத்திரிகளை சர்க்காரே எடுத்து நடத்தும் உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : No, Sir.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், வேலூரில் நடக்கும் சி.எம்.சி. ஆஸ்பத்திரியில் நோயாளிகளைக் கூப்பிட்டு அழைத்து வைத்துக்கொண்டு ஒரு குறிப்பிட்ட இடத்தில் மத போதனை நடத்தப்பட்டு வருகிறது. அதற்கு இந்தச் சர்க்கார் ஏதாவது அங்கிகாரம் கொடுத்திருக்கிறார்களா ? இல்லையானால் அதன் பேரில் சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

THE HON. SRI M. A. MANICKAVELU : அந்தத் தகவல் இப்பொழுது என்னிடம் இல்லை. அங்கு கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர்கள் மத போதனை நடத்தினாலும்கூட எல்லோரும் அங்கே சேர்ந்து செய்கிறார்கள். சில இடங்களில் அப்படி நடக்கலாம். அம்மாதிரி நடக்கிறது என்று கனம் அங்கத்தினர் ஏதாவது தகவல் கொடுத்தால் அதைப்பற்றி கவனிக்கப்படும். கனம் அங்கத்தினர் அப்படி தகவல் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

SRI A. A. RASHEED : Is the Hon. Minister aware that some of the hospitals run by the Missions are run most efficiently in our State?

DEPUTY SPEAKER : It is a matter of opinion.

THE HON. SRI M. A. MANICKAVELU : Some of the Government hospitals are also run very efficiently.

SRI K. B. S. MANI : இம்மாதிரி தனிப்பட்ட மதத்தினரால் நடத்தப்படும் ஆஸ்பத்திரிகளில் பொதுவாக, பிரார்த்தனை என்ற ஒரு முறை இருக்கிறதே தவிர, அவர்கள் அங்குள்ள நோயாளிகளைக் கட்டாயப்படுத்தி கிறிஸ்தவர்களாக ஆகவேண்டுமென்று சொல்வது கிடையாது. அவர்கள் சார்ந்திருக்கும் மதத்தை ஒட்டித்தான் நடத்துகிறார்கள். பொதுவான முறையில் ஆஸ்பத்திரிகளில் உள்ள நோயாளிகள் பிரார்த்தனை செய்துகொள்வதற்கும், அதன் மூலம் பக்தியை வளர்ப்பதற்கும் வேண்டிய வசதியைச் சர்க்காரே செய்து கொடுக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : என் சார்பிலே கனம் அங்கத்தினர் அவர்கள் பதில் சொன்னார் என்று நான் நினைக்கிறேன்.

SRI V. K. KOTHANDARAMAN : கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, அங்கு நடந்த பிரார்த்தனையில் நர்ஸ்கள் தான் இருந்ததாகக் குறிப்பிட்டார்கள்—கனம் அமைச்சர் அதே

ஊரில் இருந்திருந்தும்கூட, அந்த ஆஸ்பத்திரியில் இப்பொழுது பார்த்தாலுங்கூட ஒரு புத்தகக் கடை வைத்திருப்பது தெரியும். அதிலிருந்து ஓரணு, இரண்டணு விலையுள்ள புத்தகங்களைக் கட்டாயமாக நோயாளிகள் வாங்கவேண்டியிருக்கிறது. அதுவும் தவிர, அங்குள்ள கிறிஸ்தவ நோயாளிகள் மட்டுமல்லாமல், எல்லா நோயாளிகளையும் சேர்த்துவைத்து, தினந்தோறும் மதபோதனை செய்யப்படுகிறது. இதைப் பரிசீலனை செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : புத்தகம் அங்கே வைத்திருக்கலாம் தரும உண்டி வைத்திருப்பதுபோல. தரும உண்டியில் இஷ்டப்பட்டவர்கள் போடலாம். கட்டாயம் இல்லை. 'கம்பல்ஷன்' என்பதைக் கனம் அங்கத்தினர் வற்புறுத்திச் சொல்கிருர். அப்படி இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அப்படியிருந்தால் அவர் அதைத் தெரிவித்தால், பரிசீலிக்கலாம்.

Thambikottai Channel

* 1577 *Q.*—SRI R. SRINIVASA IYER (on behalf of SRI A. R. MARIMUTHU) : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பட்டுக்கோட்டை வட்டத்திலுள்ள தம்பிக்கோட்டை கிராமத்திற்கு நீர்ப்பாசன வசதியளிக்கும் தம்பிக்கோட்டை கால்வாய் (பாமனி ஆற்றிலிருந்து பிரிவது) எப்போது பழுது செய்யப்படும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Proposals for effecting repairs and improvements to the Thambikottai channel are under examination by the Chief Engineer (Irrigation) in consultation with the Collector of Thanjavur.

SRI R. SRINIVASA IYER : தம்பிக்கோட்டை வாய்க்கால் பாமனியாற்றிலிருந்து பிரிந்து கன்னுறைற்றுக்குக் குறுக்கே கீழ்க் குமிழி வழியாகச் சென்று தம்பிக்கோட்டையிலுள்ள சுமார் முன்னூறு ஏக்கராவுக்குப் பயன்பட்டுக்கொண்டிருந்தது. அந்தக் கீழ்க் குமிழி உடைந்து முப்பது, நாற்பது வருஷங்கள் ஆகின்றன. பிரதம இன்ஜினீர் அவர்கள் அதைப் பார்த்து ரிப்பேருக்கு உத்திரவிட்டு ஏறக்குறைய ஆறு மாதங்கள் இருக்கலாம். தம்பிக்கோட்டைக் கால்வாய் அபிவிருத்தி வேலையைத் துரிதப்படுத்தி நல்ல முறையில் அதன் மூலம் பாசனம் ஏற்படுவதற்கு வகை செய்ய சர்க்கார் முன்வருவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கடைசியாக வந்தத் தகவலின்படி, இது கலெக்டரின் பரிசீலனையில் இருக்கிறது. அவரிடமிருந்து தகவல் வந்ததும் இந்த திட்டத்தை எடுத்துக் கொள்ளவேண்டும். கனம் அங்கத்தினர் அவர்கள் தஞ்சாவூர் போகும்போது அவரே கலெக்டரைப் பார்த்து சீக்கிரத்தில் அனுப்பும்படிச் சொல்லலாம்.